மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்

# விநாயகர் தோத்திரம்



*சைவமுன்னேற்றச் சங்கத்தின்*
*25ஆம் ஆண்டு மலர்கின்ற வேளையில் இவ்வாண்டின்*
*முதற்பணியாக விக்கினம் அகற்றும் அருள்தரு*
*ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலய மஹாகும்பாபிஷேக*
*பெருவிழாவன்று இதனை வெளியிட்டு*
*அவர் திருவருளை வேண்டுகிறோம்.*

**2-9-2001**

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்

**சைவ முன்னேற்றச் சங்கம் (UK)**

"சைவ சமயக் கருத்துணர்வினூடாகச் சமூக சேவை"

Registered Charity
No. 292085

**Saiva Munnetta Sangam (UK)**

*"Community Service Through Hindu Concern"*

2, Salisbury Road, Manor Park, London E12 6AB

**Tel: 0208 514 4732 / 0208 550 2739 / 01268 766624**

**Fax: 01268 561805**

Bankers: Lloyds TSB Bank Plc. & National Savings Bank

Auditor: AJ Accountants


## "எம் செயலாவது
## யாதொன்றும் இல்லை"

ஈன்று ஈர்பன்னிரண்டு ஆண்டுகள் ஏகின.
ஈசனார் ஈரக் கருணையால்
தொண்டுகள் ஆயிரம் ஆயின.
ஈங்கு பலரையும் ஈந்த்தோம்.
நாம் ஈட்டிய புகழனைத்தும் அரனுக்கே
ஈந்தோம்.
ஈதலும் ஈகையும் ஈண்டு காட்டிய
அன்பர்களுக்கு
ஈடிலா நன்றி சொல்கிறோம்.

**சைவமுன்னேற்றச் சங்க ஆட்சிக்குழு.**

உ

# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தாமரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசைபாடப்
பொன்அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வண்ண மருங்கில் வளர்ந்தழ கெறிப்ப
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழுது என்னை ஆட்கொள வேண்டி
தாயா யெனக்குத் தானெழுந்தருளி
மாயப்பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதல்ஐந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளி
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தறிவித்து
இருவினைதன்னை அறுத்திருள் கடித்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே

இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழிமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவி லுணர்த்தி
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூக்ஷமும்
எண் முகமாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசெனப் படுத்தி
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கிய எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிடமென்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்தி என் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்து அருள்வழிகாட்டி
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டி
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!

(விநாயகர் அகவல் முற்றிற்று)

## விநாயகர் துதி

### திருச்சிற்றம்பலம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதந்
தப்பாமற் சார்வார் தமக்கு.

சக்தியாய் சிவமாகி தனிப்பர
முத்தியான முதலைத் துதிசெய
சுத்தி யாகிய சொற்பொருள் நல்குவ
சித்தி யானைதன் செய்ய பொற்பாதமே.

திருவாக்குஞ் செய்கருமங் கைகூ டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்–உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத் தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை

## விநாயகர் புராணம்

காசிபரால் அருளப்பட்டது

வளர்சிகைகையைப் பராபரமாய் வயங்கு விநாயகர் காக்க
வாய்ந்த சென்னி அளவுபடா அதிகசவுந்தர தேக
மதோற்கடர் தாமமர்ந்து காக்க
விளரற நெற்றியை யென்றும் விளங்கிய காசிபர்காக்க
தடவிழிகள் பால சந்திரனார் காக்க.

கவின் வளருமதரம் கசமுகர் காக்க
தாலம்கணக்கிரீடர் காக்க
நவில் சிபுகம் கிரிசைசுதர் காக்க
நனி வாக்கை விநாயகர் தாங்காக்க
அவிர் நகை துன்முகர் காக்க
வள்ளெழிற் செஞ்செவி பாசமணி காக்க
தவிர்தலுறாது இளங்கொடி போல் வளர்மணி நாசியைச்
சிதுதிதார் காக்க

காமரு பூமுகந் தன்னைக் குணேசர் நனி காக்க
களம் கணேசர் காக்க
வாமமுறு மணிமுலை விக்கினவினாசன் காக்க
இதயந் தன்னைத் தோமகலும் கணநாதர் காக்க
அகட்டினைத் துலங்கு ஏரம்பர் காக்க

பக்க மிரண்டையுந் தராதரர் காக்க
பிருட்டத்தைப் பாவ நீக்கும் விக்கினகாரகன் காக்க
விளங்கி லிங்கம் வியாவபூடனர் காக்க,
சகனத்தையல்ல லுக்கணபன் காக்க
ஓருவை மங்கள மூர்த்தி காக்க

தாழ்முழந்தாள் மகாபுத்தி காக்க
இருபதம் ஏகதந்தர் காக்க
வாழ்கரங்கப் பிரப்பிரசாதனர் காக்க
முன்கையை வணங்குவார் நோயாழ்தரச் செய்யா
சாபூரகர் காக்க

விரல் பதும வத்தர் காக்க
கேழ்கிளரு நகங்கள் விநாயகர் காக்க
கிழக்கினிற் புத்தீரர் காக்க

அக்கினியிற் சித்தீசர் காக்க
உமாபுத்திரர் தென்னாசை காக்க
மிக்க நிருதியிற் கணேசர் காக்க
விக்கின வர்த்தகர் மேற்கென்னுந் திக்கதனிற் காக்க
வாயுவிற் கசகன்னன் காக்க
திகழுதீசி தக்கநிதியன் காக்க
வடகிழக்கிலீச நந்தனரே காக்க

ஏகதந்தர் பகன் முழுதும் காக்க
விரவினும் சந்திரிரண்டன் மாட்டும் ஓகையின்
விக்கினகிருது காக்க
விராக்கதர் பூத முறுவேதாள மோகினி பேயிவையாதி
உயிர்திறத்தால் வருந்துயரும் முடிவிலா வேகமுறு
பிணி பலவும் விலக்கு பாசாங்குசர் தாம் விரைந்து காக்க

மதி ஞானம் தவந்தானம் மனமொழி புகழ்குலம்
வண்சரீர முற்றும் பதிவான தனம் தானியம் கிருகம்
மனைவி மைந்தர் பயில் நட்பாதிக் கதியாவும் கலந்து
சர்வாயுதர் காக்க
காமர் பவுத்திரர் முன்னான் விதியாருஞ் சுற்றமெலா
மயூரேசர் எஞ்ஞான்றும் விரும்பிக்காக்க

வென்னி சீவிதங் கபிலர் காக்க
கரியாதி யெலாம் விகடர் காக்க என்றிவ்வாறு இதனை
முக்காலமு மோதிடினும்
பாலிடை யூறொன்றும் ஒன்றாது முனிவர்காள் அறி-
மின்கள் யாரொருவர் ஓதினாலும் அன்றவர் தேகம்
பிணியற வச்சிர தேகமாகி மின்னும்.

(விநாயக கவசம் முற்றிற்று)

# விநாகர் திருவகவல்

சீர்தரு மூலச் செழுஞ்சுடர் விளக்கே
கார்நிற மேனிக் கற்பகக் களிறே
அல்லல் வினையை அறுத்திடு ஞான
வல்லபை தன்னை மருவிய மார்பா
பொங்கரவணிந்த புண்ணிய மூர்த்தி

சங்கர னருளிய சற்குரு விநாயக
ஏழை யடியே னிருவிழி காண
வேழ முகமும் வெண்பிறைக் கோடும்
திருவளர் நுதலிற் திருநீற் றழகுஞ்
சிறுத்த கண்ணுஞ் சீதளப் பார்வையும்

நறுந்திகழ் நாசியு நாண்மலர்ப் பாதமும்
நவமணி மகுட நன்மலர் முடியுங்
கவச குண்டலக் காந்தியும் விளங்கச்
சிந்துரத் திலகம் சந்தனப்பொட்டும்
ஐந்து கரத்தின் அழகும் வீற்றிருக்க

பாச வினையைப் பறித்திடு மங்குச
பாசத் தொளியும் பன்மணி மார்பும்
பொன்னா பரணமும் பொருந்துமுந் நூலும்
மின்னா மெனவே விளங்குபட் டழகும்
உந்திச் சுழியு முரோமத் தழகுந்

தொந்தி வயிறுந் துதிக்கையும் தோன்ற
வேதனும் மாலும் விமலனு மறியாப்
பாதச் சதங்கை பலதொனி யார்ப்பத்
தண்டை சிலம்புந் தங்கக்கொலிசும்
எண்டிசை மண்டல மெங்கும் முழங்கத்

தொகுது துந்துமி தொந்தோ மெனவே
தகுதிகு திந்திமி தாள முழங்க

ஆடிய பாதமண் டலர்கள் போற்ற
நாடிமெய் யடியார் நாளுந் துதிக்கக்
கருணை புரிந்து காட்சிதந் தருள

இருளைக் கடிந்து எங்கு நிறையப்
பொங்குபே ரொளியாய் பொன்மலை போலத்
திங்கள் முடியான் திருவருள் மகிழ
வந்த வாரண வடிவையுங் காட்டிச்
சிந்தை தளர்ந்த சீரடி யார்க்கு

இகபர சாதன மிரண்டு முதவி
மூலா தார முச்சுடர் காட்டி
வாலாம் பிகைதன் வடிவையுங் காட்டி
மாணிக்க மேனி மலர்ப்பதங் காட்டி
பேணிப் பணியப் பீஜாக்ஷரமும்

ஓமென்று தித்த ஓங்காரத் துள்ளே
ஆமென் றெழுந்த அக்ஷரவடிவம்
இடைபிங் கலைகள் இரண்டி னடுவே
கடைமுனை சுழிமுனைக் கபாலமுங் குறித்து
மண்டல மூன்றும் வாறுவோர் பத்தும்

குண்ட லியசபை கூறிய நாடியும்
பூதமும் பொறியும் புகழ்குண மூன்றும்
வாதனை செய்யும் அறிவையுங் காட்டி
ஆறாதார வங்குச நிலையைப்
பேறாகி நின்ற பெருமையுங் காட்டிப்

பஞ்சமூர்த்திகள் பாகத் தமர்ந்த
பஞ்சசக் திகளின் பாதமுங்காட்டி
நவ்வொடு மவ்வும் நடுவணை வீட்டில்
அவ்வு மாக்கினை யனாதி சதாசிவம்
மைவிழி ஞான மனோன்மணி பாதமும்

நைவினை நணுகா நாதகீ தமும்
கண்டு வணங்கக் கண்ணைத் திறந்து
விண்டல மான வெளியையுங் காட்டி
ஐம்பத் தோரெழுத் தட்சர நிலையை
இன்பச் சக்கர விதிதனைக் காட்டி

புருவ நடுவனைப் பொற்கம லாசனத்
திருவிளை யாடலுந் திருவடி காட்டி
நாதமும் விந்தும் நடுநிலை காட்டி
போதம் நிறைந்த பூரணங்காட்டி
உச்சி வெளிதனி லுள்ளொளி காட்டி

வச்சிரம் பச்சை மரகத முத்து
பவளம் நிறைந்த பளிங்கொளி காட்டிச்
சிவகமி லாயச் சேர்வையுங் காட்டிச்
சத்தம் பிறந்த தலத்தையுங் காட்டித்
தத்துவம் தொணணூற் றாறையும் நீக்கி

கருவி கரணங் களங்க மறுத்து
மருவிய பிறவி மாயை நீக்கி
உம்பர்கள் இருடிகள் ஒருவருங்காணா
அம்பர வெளியின் அருளையுங் காட்டி
சத்தி பராபரை சதாநந்தி நிராமய

நித்திய ரூபி நிலைமையும் காட்டி
அடியவர் ஞான வமிர்தமா யுண்ணும்
வடிவை யறியும் வழிதனைக் காட்டி
நாசி நுனியில் நடக்குங் கலைகள்
வாசிவா வென்று வாங்கிப் பிடித்து

நின்மல வடிவாய் நிறுவித் தப்புறம்
வின்மய மான விதத்தையுங் காட்டி
தராதல முழுதுங் தானாய் நிறைந்த

பராபர வெளியைப் பணிந்திடக் காட்டி
என்னுட லாவி இடம்பொருள் யாவும்

தன்னுடை வசமாந் தவநிலை காட்டி
நானெனு மாணவம் நாசம தாகத்
தானென வந்து தயக்கந் தீர
ஆன குருவாய் ஆட்கொண் டருளி
மோன ஞான முழுது மளித்துச்

சிற்பரி பூரண சிவத்தைக் காண
நற்சிவ நிட்கள நாட்டமும் தந்து
குருவுஞ் சீடனுஞ் கூடிக் கலந்து
இருவரு மொருதனி இடந்தனிற் சேர்ந்து
ஆனந்த மாகித் தற்பர வெளியில்

ஆனந்த போத அறிவைக் கலந்து
புவனத் தொழிலைப் பொய்யென் றுணர்ந்து
மவுன முத்தியை மனதி லிருத்திப்
பெண்டு பிள்ளையைப் பண்டுப தார்த்தம்
கண்டது மாயை கனவெனக் காட்டிப்

பாச பந்தப் பவக்கடல் நீக்கி
ஈசன இணையடி இருத்தி மனத்தே
நீயே நானாய் நானே நீயாய்க்
காயா புரியைக் கனவென வுணர்ந்து
எல்லா முன்செய லென்றே யுணர

நல்லா யுன்னருள் நாட்டந் தருவாய்
காரண குருவே கற்பகக் களிறே
வாரண முகத்து வள்ளல்போற்றி
நித்திய பூசை நைவத் தியமும்
பத்தியாய் கொடுத்துப் பரமனே போற்றி

ஏத்தி யனுதினம் எளியேன் பணியக்
கூற்றினை யுதைத்த குளிர்பதந் தந்து
ஆசுர மதுர வமிர்த மளித்துப்
பேசு ஞானப் பேறெனக்கருளி
மனத்தில் நினைத்த மதுர வாசகம்

நினைவிலுங் கனவிலும் நேசம் பொருந்தி
அருண கிரியா ரவ்வை போலக்
கருத்து மிகுத்து கவிமழை பொழிய
வாக்குக் கெட்டா வாழ்வை யளித்து
நோக்கரு ஞான நோக்கும் அளித்து

இல்லற வாழ்க்கை இடையூ றகற்றிப்
புல்ல ரிடத்திற் புகுந்துழ லாமல்
ஏற்ப திகழ்ச்சி என்பத கற்றி
காப்ப துனக்குக் கடன்கண்டாயே
நல்வினை தீவினை நாடி வருகினுஞ்

செல்வினை யெல்லாம் செயலுன தாமால்
தந்தையு நீயே தாயு நீயே
எந்தையு நீயே ஈசனு நீயே
போத ஞானப் பொருளு நீயே
நாதமும் நீயே நான்மறை நீயே

அரியு நீயே அயனு நீயே
திரிபுர தகனஞ் செய்தவன் நீயே
சக்தியும் நீயே சதாசிவம் நீயே
புத்தியு நீயே புராந்தகன் நீயே
பக்தியு நீயே பந்தமு நீயே

முத்தியு நீயே மோக்ஷமும் நீயே
ஏகமு நீயே என்னுயிர் நீயே
தேகமு நீயே தேவனு நீயே

உன்னரு ளன்றி உயிர்த்துணை காணேன்
பின்னொரு தெய்வம் பேசவு மறியேன்

வேதனை கொடுத்த மெய்யிது தன்னில்
வாதபித்தம் வருத்திடு சிலேட்டுமம்
மூன்று நாடியு முக்குண மாகித்
தோன்றும் வினையின் துன்ப மறுத்து
நாலாயிரத்து நானூற்றுநாற் பத்தெட்டு

மேலாம் வினையை மெலியக் களைந்து
அஞ்சா நிலைமை யருளியே நிந்தன்
பஞ்சா க்ஷரநிலை பாலித் தெனக்கு
செல்வமுங் கல்வியுஞ் சீரும் பெருக
நல்வர மேதரும் நான்மறை விநாயக

சத்திய வாக்குச் சத்தா யுதவிப்
புத்திர னேதரும் புண்ணிய முதலே
வெண்ணீ றணியும் விமலன் புதல்வ
பெண்ணாம் உமையாள் பெறுகுஞ் சரனே
அரிதிரு மருகா அறுமுகன்துணைவா

கரிமுக வாரணக் கணபதி சரணம்
குருவே சரணம் குணமே சரணம்
பெருவயி றோனே பொற்றாள் சரணம்
கண்ணே மணியே கனியே சரணம்
விண்ணே யொளியே வேந்தே சரணம்

மாத வாவி மலர்த்தடத் தருகில்
தானத்தில் வாழுந் தற்பரா சரணம்
உச்சிப் புருவத் துதித்துல களிக்கும்
சச்சிதானந்த சற்குரு சரணம்
விக்கின விநாயக தேவே ஓம்

ஹரஹர சண்முக பவனே ஓம்
சிவசிவ மகாதேவ சம்போ ஓம்.

# திருச்சிற்றம்பலம்

*கணபதி காரியசித்தி மாலை*
*காசிப முனிவர் அருளியது*

பந்தம் அகற்றும் அநந்தகுணப் பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்தவுலகும் எவனிடத்தில் ஈண்டு இருந்து கரக்குமோ
சந்தமறை ஆகமங்கலைகள் அனைத்து மெவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை அன்புகூரத் தொழுகின்றோம்.

உலகம் முழுவதும் நீக்கமற ஒன்றாய் நிற்கும் பொருளெவன் அவ்
உலகில் பிறக்கும் விகாரங்கள் உறாத மேலாம் ஒளியானவன்
உலகம் புரியும் வினைப்பயனை நீக்கும் கனைகண் எவன் அந்த
உலக முதலைக் கணபதியை உவந்து சரணமடைகின்றோம்
இடர்கள் முழுதும் எவன் அருளால் எரிவீழும் பஞ்செனமாயும்
தொடருமுயிர்கள் எவனருளால் சுரர் வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலானோர் கூறின்றி கருமம் எவனால் முடிவுறும்
அத்தடவு மருப்புக் கணபதி பொன்சரணம் சரணமடைகின்றோம்
செய்யும்வினையின் முதல் யாவன் செய்யப்படுமப் பொருள்யாவன்

ஐயமின்றி உளதாகும் அந்தக் கருமப் பயன்யாவன்
உய்யும் வினையின் பயன் விளையின் ஊட்டி விடுப்பான்
எவன் அந்தப்
பொய்யில் இறையாம் கணபதியை புகழ்ந்து சரணம-
டைகின்றோம்

வேதம் அளந்தும் அறிவரிய விகிர்தன் யாவன்
விழுத்தகைய
வேதமுடிவில் நடம்நவிலும் விமலன் யாவன் விளக்குபர
நாதமுடிவில் வீற்றிருக்கும் நாதனெவன் எண்குணன்
எவன் அப்
போதமுதலை கணபதியைப் புகழ்ந்து சரணம் அடை-
கின்றோம்

மண்ணில் ஓர் ஐங்குணமாகி வதிவான் எவன் நீரிடை
நான்காய்
நண்ணி அமர்வான் எவன் தீயில் மூன்றாய் நவில்வான்
எவன் வளியில்
எண்ணும் இரண்டு குணமாகி இயைவான் எவன்
வானிடை ஒன்றாம்
அண்ணல் எவன் அக் கணபதியை அன்பில் சரணம-
டைகின்றோம்

பாசஅறிவில் பசு அறிவில் பற்றற்கரிய பரன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும் பயிலப் பணிக்கும் அவன்
யாவன்
பாச அறிவும் பசுவறிவும் பாற்றி மேலாம் அறிவான
நேசன் எவன் அக் கணபதியை திகழச் சரணமடை-
கின்றோம்.

**திருச்சிற்றம்பலம்**

## சங்கத்தின் பணிகள்

மாதாந்த பூஜைகள்
சமய விழாக்கள் வழிபாடுகள்
நால்வர் தமிழ்க் கலை நிலையமும்
கலசம் காலாண்டிதழ்
நால்வர் முதியோர் சந்திப்பு நிலையமும்
சிவபதமடைந்தவர்களுக்கான அஞ்சலியும்
சேவையும்.


**சைவ முன்னேற்றச் சங்கம்**

2, Salisbury Road, Manor Park,
London E12 6AB
**Tel/Fax: 0208 514 4732**